# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

முறையீட்டு மனு எண்: 353/2016/பே–2

ஆணை எண்: 158/2017

நாள்: 19/06/2017

திரு. எம். நாராயணன்,
70, பூதேரிப்பண்டை கிராமம்,
ஸ்ரீபெரும்புதூர் –602 105.
காஞ்சிபுரம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

திருமதி. பரிமளா, முன்னாள் தலைவர்,
ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்–602 105. – எதிர் மனுதாரர்

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சியைச் சேர்ந்த திரு. எம். நாராயணன் என்பவரின் 7.9.2015 நாளிட்ட முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதம் ந.க.எண்.1656/2016/இ2 நாள்: 20.4.2016–ன் வாயிலாக இம்முறைமன்றத்திற்கு அனுப்பப்பட்டு 28.4.2016 அன்று பெறப்பட்டு 353/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டுக் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சியைச் சேர்ந்த எம். நாராயணன் என்பவர் பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் திருமதி. பரிமளா, மற்றும் அவரது கணவர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்கள் மீது கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

பூதேரிப்பண்டை கிராம மக்கள் 100 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தி வரும் சென்னை – பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து வடமங்கலம் செல்லக்கூடிய நெடுச்சாலையோடு இணைக்கும் பூதேரிப்பண்டை இணைப்புச் சாலையை பள்ளம் வெட்டி துண்டித்து, அண்டைய பட்டாதாரர்களை மிரட்டி மாமூல் வசூலித்து வரும் ஸ்ரீபெரும்புதூர் தலைவர் மற்றும் அவரது கணவர் ஆகியோர் மீது புகார் கூறியும் பூதேரிப்பண்டை கிராமத்தை நெடுஞ்சாலையுடன் இணைக்கும் இணைப்புச்சாலையை புலப்படத்தில் உட்பிரிவு செய்யப்படவில்லை என்றும் வருவாய் துறை கிராம வரைபடத்தில் வண்டிப் பாதையாக வரையப்பட்டு காட்டப்பட்டுள்ளது என்றும் புல வரைபடத்தில் உட்பிரிவு செய்யப்படவில்லை என்றும் பூதேரிப்பண்டை கிராம மக்கள் இந்த இணைப்பு சாலையை துண்டித்த பின்பு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வாங்க செல்வதற்கும், மருத்துவமனைக்கு செல்வதற்கும், மருந்துகள் வாங்கச் செல்வதற்கும், குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கும், அவசர கால மருத்துவ சிகிச்சைக்கு செல்வது போன்ற அனைத்து அன்றாட நிகழ்வுகளுக்கு மிகுந்த சிரமத்திற்குள்ளாவதால் அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டும் விசாரணை செய்தும் சட்டத்திற்கு எதிராக செயல்படும் மேற்படி நபர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுத்தும் எங்கள் கிராம மக்களை காப்பாற்ற வேண்டும் என முறையிட்டுள்ளார்.

இப்புகார் மனு தொடர்பாக முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.353/பேரூ/2016 நாள்:7.12.2016ன் வாயிலாக விளக்க அறிக்கை சமர்ப்பித்திட செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. ஸ்ரீபெரும்புதூர் செயல் அலுவலர், தனது 20.1.2017 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விளக்கமளித்தார்.

"திருப்பெரும்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட 9வது வார்டு பூதேரிப்பண்டைகிராமத்திற்கு சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து செல்லும் வடமங்கலம் நெடுஞ்சாலை அணுகு சாலையாக உள்ளது. வடமங்கலம் நெடுஞ்சாலையினை ஒட்டி பேரூராட்சிக்கு சொந்தமான தோப்பு புறம்போக்கு நிலங்கள் அமைந்துள்ளன. இந்த நிலங்களுக்கு பக்கத்தில் பூதேரிப்பண்டை

சுடுகாடு உள்ளது. இந்த சுடுகாட்டிற்கு பேரூராட்சி தோப்பு புறம்போக்கு நிலம் சர்வே எண்.1381/பி-ல் ஒரு பகுதியினை பூதேரிப்பண்டை பொதுமக்கள் சாலையாக பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் மேற்படி தோப்பு புறம்போக்கு நிலத்தில் திருவாளர். JK Foundation Pvt Ltd., என்ற நிறுவனம் பேரூராட்சி அனுமதியின்றி சாலை அமைத்ததால் பணி நிறுத்தப்பட்டது. இந்த நிறுவனத்தின் மூலம் திருப்பெரும்புதூர் நீதிமன்றத்தில் வழக்கு தொரப்பட்டது. இதே சாலை தொடர்பாக திரு. எம். நாராயணன் என்பவர் மனு அளித்ததால் நீதிமன்ற வழக்கின் அடிப்படையில் சாலை அமைக்கப்படுமென செயல் அலுவலர் அலுவலக 18.08.2015 நாளிட்ட கடிதம் மூலம் பதிலளிக்கப்பட்டது. இதன் பிறகு திரு. எம். நாராயணன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.25887/2015-ன்படி வழக்கு தொடரப்பட்டு 26.08.2015ம் நாளிட்ட உயர்நீதிமன்ற ஆணையின்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு Compliance Report தாக்கல் செய்ய ஆணையிடப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து சம்மந்தப்பட்ட புகார் மனுதாரர் மற்றும் சம்மந்தப்பட்டவர்களை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சார்பாக காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களால் 02.10.2015 நாளன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டு எழுத்து பூர்வமான விளக்கம் பெறப்பட்டு, புகார் மனுதாரின் கோரிக்கை ஏற்கப்பட்டு புகார் மனுவினை முடித்து காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) அவர்களின் செயல் முறைகள் ந.க.எண்.885/2015 பேரு2 நாள்:02.10.2015ன்படி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, பூதேரிப்பண்டை சுடுகாட்டிற்கு சாலை அமைக்கப்பட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் Compliance Report தாக்கல் செய்யப்பட்டது. வழக்குக்கு இறுதி ஆணையும் 06.10.2015ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது" என்றும் தெரிவித்துள்ளார். 24.1.2017 அன்று நடைபெற்ற விசாரணைக்கு வருமாறு மனுதாருக்கு அழைப்பாணை அனுப்பபட்டும், மனுதாரர் இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு வரவில்லை. மேலும் மனுதாரின் பிரதான கோரிக்கை ஏற்கப்பட்டு புகார் மனுவினை முடித்து காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு) அவர்களால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பூதேரிப்பண்டை சுடுகாட்டிற்கு சாலை அமைக்கப்பட்டுள்ளது என்று செயல் அலுவலர் அளித்த விளக்க அறிக்கை, பரிசீலிக்கப்பட்டு,

ஏற்றுக்கொள்ளப்பட்டு, மனுதாரரின் முறையீடு குறித்து மேல் நடவடிக்கை தேவையில்லை என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

27-6-17

27/6/17

பெறுநர்

1. திரு. எம். நாராயணன்,
70, பூதேரிப்பண்டை கிராமம்,
ஸ்ரீபெரும்புதூர் –602 105.
காஞ்சிபுரம் மாவட்டம்.

2. திருமதி. பரிமளா,
முன்னாள் தலைவர்,
ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்–602 105.

3. செயல் அலுவலர்,
ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

உதிரி நகல்:4